பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 21 வியாழக்கிழமை (5-08 1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 250



நல்லூர் … லகம்
யாழ்ப்பாணம்


## சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும்

# யுத்தக் கைதிகளின் நிலை மோசம்

# 12 பேர் நேற்றிரவு ஆஸ்பத்திரிக்கு!

## எந்த நேரத்திலும் எமது உயிர் பிரியலாம்

### முனகல் குரலில் கைதி பேட்டி

பேச முடியாத நிலையில் இருக்கும் யுத்தக் கைதிகளில் பி. எஸ். பண்டார என்பவர் மட்டும் நேற்று முனகல் குரலில் புலிகளின் குரல் வானொலிக்கு பேட்டியளித்தார்.

மூச்சு விடக் கஷ்டமாகவுள்ளது; வாயினாலும் மூக்கினாலும் இரத்தம் போகிறது. இன்னும் ஒரு நாளில் — இன்று இரவில் கூட — நாம் இறந்து விடலாம். அதற்கிடையில் அரசும் படை அதிகாரிகளும் மனிதாபிமான அடிப்படையில் எம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றே நாம் கேட்கிறோம், — இப்படி தமிழில் தளதளத்த குரலில் அவர் சொன்னார். (உ-5)

## கைதியின் சகோதரர் தற்கொலை செய்வராம்

கொழும்பு, ஆக. 5

புலிகளின் காவலில் யுத்தக் கைதியாக உண்ணாவிரதம் இருந்து வரும் தமது சகோதரரான பொலீஸ் கான்ஸ்டபிள் ஏ. ஜே. எம். சந்ர சேனவின் உயிருக்கு உண்ணாவிரதம் காரணமாக ஆபத்து ஏற்பட்டால் —

தானும் தற்கொலை செய்யப் போவதாக அக்கைதியின் சகோதரர் ஏ. ஜே. எம். டிங்கிரி அப்புஹாமி தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக நேற்று கொழும்பில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் அவர் ஒரு கடிதத்தை கையளித்தார். (உ-6

## கைதிகளின் உறவினர்கள் அனுப்பிய இறுதிக் கடிதம்

யாழ்ப்பாணம், ஆக. 5

உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளின் உடல் நிலை குறித்தும், அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் கைதிகளின் உறவினர்கள் ஜனாதிபதி விஜேதுங்காவிற்கும், பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்தது.

கைதிகள் விடுவிப்பு தொடர்பாக அரசுக்குத் தாம் அனுப்பும் இறுதிக் கடிதம் இது என்றும் அவர்கள் கூறியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## சடலங்களுடன் போகும் நிலையை ஏற்படுத்தாதீர்!

### தாயார் உருக்கமான வேண்டுகோள்

''எமது பிள்ளைகளைக் கூட்டிச் செல்வதற்காக நாங்கள் இங்கு வந்து 47 நாட்களாகியுள்ளன. எமது பிள்ளைகளின் உடல் நிலைமை மோசமடைந்திருக்கிறது. அவர்களின் சடலங்களை எடுத்துச் செல்லும் நிலைக்கு எங்களைத் தள்ளி விடாதீர்கள். எனவே அவசர நடவடிக்கை எடுத்து உதவுங்கள்.''

—இவ்வாறு உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## உணவின்றி இன்று 8ஆம் நாள்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5

விடுதலைப் புலிகளின் காவலில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வரும் 33 யுத்தக் கைதிகளினதும் உடல் நிலைமை நேற்று மிக மோசமான கட்டத்தை அடைந்திருக்கிறது. அவர்களில் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் 12 பேர் நேற்று இரவு யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

• கடந்த வியாழக்கிழமை உண்ணாவிரதத்தை ஆரம்பித்த கைதிகள் நேற்று ஏழாவது நாளாக அதனைத் தொடர்ந்தனர். நீர் அருந்துவதை அவர்கள் கைவிட்டு இன்று மூன்றாம் நாளாகும்.

அவர்களில் பலரின் உடல் நிலை நேற்று மோசமான கட்டத்தை அடைந்ததை அடுத்து அவர்களில் 12 பேர் அவசர வைத்திய சோதனைக்காக நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கச்சியில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 5

இயக்கச்சிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ காவலரண்களில் இருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் முன்னேற முற்பட்ட படையினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர். இத் தாக்குதலில் இராணுவத் தரப்பிற்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (உ - 5)

## 12 தமிழர் கைது

கொழும்பு, ஆக. 5

யாழ்ப்பாணம், பருத்தித்துறை மற்றும் அம்பாறை பகுதிகளைச் சேர்ந்த 12 தமிழ் இளைஞர்கள் அவிசாவளையில் தோட்டப்பகுதி லயன் அறை ஒன்றில் தங்கியிருந்த போது கடந்த சனியன்று கைது செய்யப்பட்டனர். கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று இத்தகவலை வெளியிட்டது. (உ - எ)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஆக. 5

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வியாழக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கைதிகளை விடுவிக்க 'ஸெடக்' அமைப்பு முயற்சி

உண்ணாவிரதம் இருந்து வரும் யுத்தக் கைதிகளை விடுவிக்கும் முயற்சியில் ''செடக்'' நிறுவனம் ஈடுபடவிருப்பதாக அதன் பணிப்பாளர் பிதா ஒஸ்வால்ட் பேர்ட்லி கொழும்பில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நிறுவனப் பிரதிநிதிகள் வடக்கே செல்ல விரும்புவதாகவும், தமது முயற்சிக்கு பௌத்த இறை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அறுவை சிகிச்சையில் கவனயீனம்

## யாழ். இளைஞரின் இதயத்துக்குள் தகடு!

### டாக்டர்கள் வைத்து தைத்தனர்

கொழும்பு, ஆக. 5

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 வயதான பிரான்ஸிஸ் செல்வநாதன் என்பவர் இருதய அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார் என்றும்—

அப்போது அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த பதினைந்து என்ற இலக்கம் பொறிக்கப்பட்டிருந்த அலு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்சினைக்குத் தீர்வு:

## சர்வதேச உதவி கோர ஜனாதிபதி டி.பி. முடிவு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு சர்வதேச உதவியை கோரவுள்ளதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

மலேசிய நாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

இனப்பிரச்சினை மட்டுமன்றி பொருளாதாரம் மற்றும் பிரச்சினைகளுக்கும் சர்வதேச சமூகத்தின் உதவியை தாம் நாடவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (உ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதி கூட்டுத்தாபனமும் மக்கள் மயப்படுத்தப்படும்

அரசாங்கத்தின் பொருளாதார தாராள மயமாக்கக் கொள்கைக்கிணங்க இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மக்கள் மயமாக்கப்படவிருக்கிறது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிட்டட் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஷ்ரப் கனி இத் தகவலைத் தெரிவித்தார்.

மக்கள் மயமாக்கும் நடவடிக்கைகள் நிறுவனத்தின் சேவையாளர் நலனுக்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்படும் என்றும் —

நிறுவனத்தின் 10 வீதமான பங்குகள் சேவையாளர்களுக்கு வழங்கப்படும் என்றும் —

மொத்தப் பங்குகளில் 40 வீதமான பங்குகள் அரசாங்கத்தின் உடமையில் இருக்கும் என்றும் —

மிகுதியான பங்குகள் மக்களுக்கு விற்கப்படும் என்றும்— அவர் தெரிவித்தார். (க)

# யாழ். ஆஸ்பத்திரி தாதியர் இன்று கறுப்புப்பட்டி இயக்கம்

யாழ்ப்பாணம், ஆக 5

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் தாதியர் இன்று கறுப்புப் பட்டி அணிந்து கடமையாற்றுவர்.

இலங்கை முழுவதிலும் உள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் பொது வைத்திய தாதிகள் சங்க உறுப்பினர்கள் கடந்த மாதம் 19 ஆம் திகதி முதல் கறுப்புப் பட்டி அணியும் இயக்கத்தை நடத்தி வருகின்றனர்.

சம்பள உயர்வு, வாராந்த மொத்த வேலை நேரக் குறைப்பு, மற்றும் பல கோரிக்கைகளை முன் வைத்து கறுப்புப்பட்டி அணியும் இயக்கம் நடைபெற்று வருகிறது.

இந்த இயக்கம் பூரண வெற்றிபெற ஆதரவு தெரிவிக்கும் வகையிலேயே யாழ். ஆஸ்பத்திரி தாதிவர்கள் இன்று கறுப்புப்பட்டி அணிந்து பணி புரிய உள்ளனர். (அ)

## பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 5

சாரைநகர் வளந்தலைச் சந்தியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் பொன்னாலை, வலிமேற்கு கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தினர். (உ-5)

## 'நல்லைக் குமரன் மலர்' வெளியீடு

## 07 - 08 - 1993

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவினால் எதிர் வரும் 07 - 08 - 93 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் "நல்லைக்குமரன் மலர்" வெளியீடு செய்யப்படவுள்ளது.

மேற்படி நிகழ்ச்சியில் பங்குபற்றி முதல் நாள் மலரினைப் பெற்று எமக்கு ஆதரவு நல்க விரும்புவோர் எதிர்வரும் 07 - 08 - 93 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 00 மணிக்கு முன்னதாக கீழ்க்காணும் மாநகர ஆலுவலகங்களில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

01. மாநகராட்சி மன்றத்தின் பிரதான அலுவலகம்.
02. நல்லூர் கந்தசுவாமி கோவிலின் மேற்கு வீதியிலுள்ள சுகாதார அலுவலகம்.
03. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கண்டி வீதி, சுண்டிக்குளி.

சைவசமய விவகாரக் குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
04 - 08 - 1993. (சி-5564)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## பொது அறிவித்தல்

ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் மேன் முறையீட்டு நீதிமன்ற 506/93 ஆம் இலக்க வழக்கின் படியான தடையுத்தரவுக்கமைவாக, 1993 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட வருடாந்த மதிப் பீட்டின் பிரகாரமான சோலைவரி அறவீடு மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளது என்பதனை மாநகரசபையின் சகல வரியிறுப்பாளர்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
04-08-1993. (சி/5563)

# விளையாட்டு நிகழ்வுகள்

காந்தி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சுன்னாகம் சிங்கமாப்பாணர் மைதானத்தில்— 9பேர் கொண்ட அணிகளுக்கிடையில்— விலகல் முறையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3-30 மணி: அளவெட்டி விநாயகர் வி. க. "ஏ" எதிர் குருநகர் பாடும் மீன் வி. க. "பி"

★ 4-30 மணி:- குருநகர் பாடும்மீன் "ஏ" எதிர் கோப்பாய் கோல்ட் ஸ்ரார் வி. க.

o o o

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் அதன் 23 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்திவரும் — 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான— உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை கொழும்புத்துறை இந்து ம. வி. மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.00 மணி:- புனித ஆரோக்கியநாதர் வி. க. அணி எதிர் பாரதி ச. ச. நிலைய அணி.

★ 3.45 மணி:- புனித யாகப்பர் வி. க. அணி எதிர் புங்குடுதீவு அம்பாள் வி. க. அணி.

★ 4.30 மணி:- இறீன்சின் வி. க. அணி எதிர் சச்ச மோட்டை ச. சு நிலைய அணி.

o o o

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம் மயிலணியில் நடத்தி வரும் ரச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழகங்கள் வருமாறு;-

3.30 மணி: சுன்னாகம் வளர்பிறை வி. க. எதிர் உடுவில் ஜொலி ஸ்ரார் வி. க.

4 30 மணி:- மயிலிட்டி ஒற்றுமை வி. க. எதிர் வடலியடைப்பு காந்திஜி வி. க.

## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டைமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் "முருகன் பெருமை" எனும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (க)

o o o

பாசையூர் புலவர் முத்தராசகவிஞர் ஆ. செகராசசிங்கத்தின் முழு அளவிலான சம்பூரண அரிச்சந்திரா நாட்டுக்கூத்து நாளை வெள்ளிக்கிழமை இரவு 8மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

## இன்று

சுழிபுரம், ஆக. 5

தொல்புரம் - கிழக்கு விக்னேஸ்வரா சன சமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவகலாலா கலந்து கொள்வார். (உ-88)

# 4 ஆயிரம் மெற்றிக் தொன் மா 'வாதுவ'வில் ஏற்றி வரப்படும்

தற்சமயம் பருத்தித்துறையில் தரித்துள்ள 'வாதுவ' கப்பல் திருகோணமலை சென்று 4 ஆயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றிவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'வாதுவ' கப்பலில் இருந்து பொருள் இறக்கும் வேலைகள் துரிதமாக நடைபெறுவதாகவும்—

பெரும்பாலும் எதிர்வரும் 8 ஆம் திகதி மா ஏற்றி வருவதற்காக அது திருகோணமலை நோக்கிப் புறப்படும் என்றும்— அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ-8)

# வடமத்திய மாகாணத்தில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

## புலிகள் குழு ஊடுருவலாம்

கொழும்பு, ஆக. 5

வடமத்திய மாகாணத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவது என்று வடமத்திய மாகாண சபையின் பாதுகாப்புக் குழு தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமத்திய மாகாணத்தில் உள்ள வில்பத்து மற்றும் மகாவிலாச்சிய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் குழு ஒன்று ஊடுருவல் செய்துள்ளதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

# கட்சி எம்.பிக்கு எதிராக பிரேமா விதித்த தடை நீக்கம்

கொழும்பு, ஆக. 5

கட்சியின் மாநாடுகளில் கலந்துகொள்ளக் கூடாது என்று கொழும்பு மாவட்ட ஐக்கியதேசியக் கட்சி எம். பி யான ஸ்ரீநாத் குமாரசிங்கா மீது முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா விதித்திருந்த தடையை தற்போதைய ஜனாதிபதி விஜேதுங்கா நீக்கி விட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியுடன், திரு. குமாரசிங்கா நெருங்கிய தொடர்பை வைத்திருந்தார் என்ற காரணத்துக்காக அவர் மீது இத்தடை விதிக்கப்பட்டிருந்தது. (உ-எ)

## உப்பு விளைச்சல்

மருதங்கேணி பாலத்திற்கு அண்மையில் பெருமளவில் உப்பு விளைந்துள்ளது. மக்கள் இப்பகுதியில் உப்பு சேகரிப்பதில் ஈடுபட்டு வருகின்றார்கள். (க-144)


## கலை நிகழ்ச்சி

யாழ். வர்த்தகர் சங்கம்
சங்க வளர்ச்சிக்காக நடத்தும்
**நிதியுதவி நிகழ்ச்சி**

இடம்: இளம் கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.
காலம், 07 08 93 சனிக்கிழமை
நேரம்: மாலை 3-30 மணி முதல் இரவு 2.00 மணி வரை.

மங்கள இசை:- திரு என்.ஆர்.எஸ். ரவீந்திரன்
தவில்:- திரு. என் ஆர்.எஸ். சுதாகரன்
(காலஞ்சென்ற தவில்மேதை என். ஆர். சின்னராசாவின் புதல்வர்கள்)

நாதஸ்வர இசை
திரு. ஏ. முருகானந்தம்
திரு. கே. ஸ்ரீதரன்

பரதநாட்டியம்:- சல்வன்
எம். அருள்மோகன்
திருமதி
சுகந்தினி தயாசிலன்

முதன்முறையாக
**சாந்தன், ராஜன்ஸ் குழுவினர்**
ஒரே மேடையில் இணைந்து வழங்கும்
★ இன்னிசை கானங்கள் ★
31-07-93 நடைபெற வேண்டிய நிகழ்வு
07-08-93 ஆம் திகதி நடைபெறும்.

வாழ்த்துபவர்:
குமார் ரெக்ஸ்ரைஸ்
முத்திரைச் சந்தி (சங்கிலியன் சிலைக்கு முன்பாக),
நல்லூர், யாழ்ப்பாணம்.
(26827)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இல நூலகம் யாழ்ப்பாணம்

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்.

★ நாவலர் மணிமண்டப முன்றலில் தெய்வீக இசை அரங்கில் திரு. ஜி. சாந்தனின் பக்திப்பாடல்கள் மாலை 6 மணி முதல்.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்துவிநாயகர் கோயிலில் 5-15 — 6-15 "முதல் தாம்பூலம்" எனும் பொருளில் கானகலாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில்-

பிற்பகல் 2-30 மணிவரை "அன்பினில் விளைந்த ஆரமுது" எனும் பொருளில் திருமதி நாச்சியார் செல்வநாயகம் சமயச் சொற்பொழிவு

மாலை 5·30 — 6-30 மணி வரை பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி "வீரவாகு தூது" எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3-00 — 4-30 மணிக்கு கந்தபுராண படனம்.

(ச-111-126)

## நெல் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஆக. 5

பூநகரிப் பகுதியில் நெல் மூடை 450 ரூபாவாக விற்கப்பட்டு வருகிறது. குத்தரிசியும் கிலோ 18 ரூபாவாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

(இ-17)

# பத்தாண்டு கால ஈழ யுத்தத்தில் புலிகளுக்கு மிகப் பெரிய வெற்றி

## மண்கிண்டி மலை முகாம் தாக்குதல் குறித்து 'சண்டே ரைம்ஸ்'

கொழும்பு, ஆக. 5

மணலாறு, மண்கிண்டி மலை முகாம் (ஜனகபுர) தாக்குதல், பத்தாண்டு காலமாக நடந்து வரும் ஈழம் யுத்தத்தில் விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி. ஐந்து கோடி ரூபா பெறுமதிக்கு மேற்பட்ட போர்க் கருவிகளையும், தளபாடங்களையும் விடுதலைப் புலிகளிடம் ப கொடுத்தது இராணுவத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

'சண்டேரைம்ஸ்' தனது இராணுவப் பகுப்பாய்வாளரை மேற்கோள்காட்டி இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

'சண்டேரைம்ஸ்' கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கிழக்கு மாகாணத்தில் எதிர் வரும் அக்டோபர் மாதத்தில் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதற்கு அங்கு இராணுவ பலத்தை அதிகரிப்பதற்கு எடுத்த நடவடிக்கைகள்தான் ஏனைய பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களைப் பலவீனப்படுத்தின என்று சில இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்.

அரசியல் திடசித்தம் இல்லாமையும் தீர்க்கமான செயல்பாடு இல்லாமையும் தான் மண்கிண்டி மலை இராணுவ முகாம் பேரழிவுக்குப் பிரதான காரணமாகும்.

விடுதலைப்புலிகளிடம் பல கோடி ரூபா பெறுமதியான போர்க் கருவிகளையும் தளபாடங்களையும் இராணுவம் இழந்துள்ளது குறித்து பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் வால்டர் பெர்னாண்டோ கவலை தெரிவித்துள்ளதுடன், பூரணவிசாரணை ஒன்றுக்கும் உத்தரவிட்டிருக்கிறார்.

மண்கிண்டி மலைத் தாக்குதலால் இராணுவத்தினர் அதிர்ச்சியடைந்துள்ளனர். கனிஷ்ட தர அதிகாரிகள் கோபங்கொண்டுள்ளனர். யுத்தம் விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்பதுதான் அவர்களின் இன்றைய அவசரத் தேவையாக உள்ளது. யுத்தம் பற்றி ஆட்சி பீடத்தில் உள்ளவர்களின் ஆர்வமற்ற போக்கு அவர்களை விரக்தி நிலைக்குத் தள்ளி உள்ளது.

### நாய்களை போல் சாக விரும்பவில்லை

'வெற்றிக்காக நாம் சண்டையிட விரும்புகின்றோம். ஆனால் நாய்கள் போன்று நாம் சாக விரும்பவில்லை' — இப்படி கனிஷ்ட அதிகாரி ஒருவர் சொன்னார்.

இதுபோன்ற பேரழிவுகள் மீண்டும் இடம் பெறாமல் தடுப்பது குறித்து அதிகமான சிரேஷ்ட அதிகாரிகள் கவனஞ் செலுத்துகின்றனர். மணலாறு இராணுவத்தின் மத்தியில் தரத்துக்கு தரம் உணர்ச்சி அலைகள் வித்தியாசப்படுகின்றன. ஆனால் படையினர் அனைவருக்கும் ஒரு பொது இலட்சியம் உண்டு. நான்கு மாவட்டங்களிலும் இருந்து— அனுராதபுரம், முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா — பிரித்து எடுக்கப்பட்டு, வடக்கை கிழக்குடன் நிலரீதியாக இணைப்பதை பிரிக்குமுகமாக, உருவாக்கப்பட்டுள்ள மணலாற்றை பாதுகாத்துப் பேணுவதே அந்த இலட்சியமாகும்.

### பிரிகேடியர் ஆத்திரம்

மண்கிண்டிமலைத் தாக்குதலைத் தொடர்ந்து அங்கு விஜயம் செய்த அமைச்சர்கள் குழுவிடம், தமக்கு போதுமான பாதுகாப்பு தரப்படவில்லை என்று சிங்களக் கிராமவாசிகள் தெரிவித்தனர். அதனால் ஆத்திரமடைந்த பிரிகேடியர் பாறி லியனகே,

'தகவல் கொடுப்பது போன்ற துறைகளில் சிங்களக் குடியானவர்களிடம் இருந்து படையினருக்கு போதுமான ஒத்துழைப்புக் கிடைப்பது இல்லை'— என்று அமைச்சர்களிடம் முறையிட்டார்.

தமது சொந்த முகாம்களையே விடுதலைப் புலிகளின் நேர்முகத் தாக்குதலில் இருந்து காப்பாற்ற முடியாத துர்ப்பாக்கிய பேரழிவு நிலைக்கு இலங்கை இராணுவம் எப்படி வந்தது?

வடபகுதி யுத்தங்கள் கடந்த காலங்களில் கொக்காவில், மாங்குளம், வெற்றிலைக்கேணி, இப்போது மண்கிண்டி மலை போன்ற உதாரணங்களைத் தந்துள்ளன.

கடந்த ஆண்டு வெற்றிலைக்கேணியில் நடந்த தாக்குதலிலும் படையினர் 5 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை இழந்திருந்தனர்.

நேர்முனைத் தாக்குதலுக்கு இராணுவ முகாம்கள் ஆளாக வேண்டிய பயங்கரநிலை ஒருபுறமிருக்க, பல கோடி ரூபா பெறுமதியான போர்க்கருவிகளை இழந்ததுதான் பாதுகாப்பு வட்டாரங்களில் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

### பட்ஜெட்டில் நிதி

"நாம் எமது பாதுகாப்பு பட்ஜெட்டைத் தயாரிக்கும் போது எதிரியின் திறமையை அதிகரிக்கும் திட்டத்துக்கு எம்மையறியாமலே நிதியை ஒதுக்கின்றோம்போல் தெரிகின்றது" — இப்படி சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறினார்.

"எமது சொந்த போர்க் கருவிகளை எதிரி பறித்தெடுத்து பலம்பெறுகின்றான்" என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

பாதுகாப்புச் செலவீனம் கடந்த ஆண்டு 2,000 கோடி ரூபாவாக இருந்தது. 1982 இல் இச்செலவீனம் 140 கோடி ரூபாவாக இருந்தது.

"இந்த புதிய இழப்புகளைப் பார்க்கும்போது வரி செலுத்துவோர் மீதான சுமை பெரிதாக இருக்கப்போகின்றது. இது ஒரு புறமிருக்க, வரும் ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையில் துருப்புகளை வைத்து பராமரிப்பது, புதிய போர்க் கருவிகளை வாங்குவது ஆகியன தவிர்க்க முடியாததாக இருக்கும்" — என்று அந்த அதிகாரி கூறினார்.

### வடபகுதி முகாம்கள் அச்சுறுத்தலில்

கிழக்கு மாகாணத்தில் முகாம்களைப் பலப்படுத்துவதற்காக வடபகுதியில் இருந்து துருப்புகளை அகற்றுவதால் வடபகுதி முகாம்கள் அச்சுறுத்தலுக்கு இலக்காகி உள்ளன என சில பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகின்றனர்.

வடபகுதி பாதுகாப்பு நடவடிக்கைகள் குழப்பப்படாது இருக்கும் என்ற உத்தரவாதம் வழங்கப்படாமல் வடபகுதியில் இருந்து படையினர் வாபஸ் வாங்கப்படுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

தத்துவம் பேசுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று வேறு சிலர் வெளிப்படையாக கூறுகின்றனர்.

மண்கிண்டிமலை முகாம் தாக்குதல் சம்பவம் குறித்து தேசிய பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கவலை தெரிவித்தார். மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பிரதமர் இறுக்கமாக விவரித்தார்.

இவ்வாறு "சண்டே ரைம்ஸின்" இராணுவப் பகுப்பாய்வாளர் தெரிவித்திருக்கிறார்.

மண்கிண்டிமலைத் தாக்குதல், விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவரீதியிலும் நிதிரீதியிலும் பலவீனமாக உள்ளது என வெளியான அறிக்கைகள் பிழையானவை என்று எடுத்துக்காட்டியுள்ளது என்றும் சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

மண்கிண்டிமலைத் தாக்குதலின் பின் அங்கு சென்று நேரடியாக நிலைமையைப் பார்த்த சண்டே ரைம்ஸ் செய்தியாளர்களின் கருத்துகளும் பேட்டிகளும் சண்டே ரைம்ஸில் வெளியிடப்பட்டன.

(இ·எ)

# ஜனாதிபதி இடம்பெயர் சேவையின்போது தற்கொலைப்படை நடமாட்டம் இருந்தது

## ஜனாதிபதியின் மட்டுநகர் விஜயம் ரத்துக் குறித்து பிரட்மன் வீரக்கூன்

கொழும்பு, ஆக. 5

மூன்று மாதங்களுக்கு முன்னர் ஒரு ஜனாதிபதியை இழந்தோம். ஆகவே புதிய ஜனாதிபதியின் பாதுகாப்புக் குறித்து விழிப்பும், எச்சரிக்கையும் தேவை. மட்டக்களப்பில் நடைபெற்ற ஜனாதிபதி இடம் பெயர் சேவையின் போது தற்கொலைப் படையினரின் நடமாட்டம் இருந்தது.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதியின் வெளியுறவுச் செயலாளர் பிரட்மன் வீரக்கூன் மேற்கண்டவாறு கூறினார்.

"மட்டக்களப்பு செல்ல ஜனாதிபதி தயாராக இருந்தார். அவரை ஏற்றிச் செல்ல ஹெலிக்கொப்டரும் தயாராக இருந்தது. ஆனால் பயணத்தை ரத்துச் செய்யும்படி பாதுகாப்பு அதிகாரிகள் ஜனாதிபதிக்கு ஆலோசனை தெரிவித்தனர். அதன் பின்னரே ஜனாதிபதி தமது மனதை மாற்றினார்" — என்றும் திரு. வீரக்கூன் கூறினார்.

சுகயீனம் காரணமாக மட்டக்களப்புக்கு அவர் செல்லவில்லை என்று ஒரு செய்தி கூறுகிறதே என்ற கேள்விக்கு பிரட்மன் வீரக்கூன் பதிலளிக்கையில்—"அது தவறான செய்தி - யார் அப்படிச் சொன்னது என்பது எனக்குத் தெரியவில்லை" — என்றார்.

பெரும்பாலான அமைச்சர்கள் மட்டக்களப்புக்கு செல்லவில்லையே என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் — "அது பற்றி எனக்குத் தெரியாது. படையினர் திறமையாகச் செயல்பட்டனர் தற்கொலைப்படையினர் அங்கு நடமாடினர்" — என்றும் அவர் கூறினார். (இ-எ-3)

## அரச அதிபரை சந்திக்கலாம்

யாழ்ப்பாணம், ஆக 5

விவசாயக் கிருமி நாசனிகளை கொழும்பிலிருந்து கொள்வனவு செய்வதற்காக விண்ணப்பித்த தனியார்வர்த்தகர்கள் கொழும்பில் தற்போது தங்கியுள்ள யாழ். அரச அதிபரை அங்கு வைத்து சந்திக்குமாறு யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் கேட்டுள்ளார்.

(த-162)


## அச்சக முகாமையாளர் தேவை

சைவப்பிரகாச அச்சியந்திரசாலைக்கு முகாமையாளர் தேவை

அச்சுக்கலையிலும், முகாமைத்துவப் பணியிலும் முன் அனுபவம் உடையவர்கள் முன் அனுபவத்தினை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் போட்டோ பிரதியுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 01 - 09 - 1993 புதன் கிழமை.

செயலாளர்,
சைவபரிபாலன சபை,
450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்:

அ. சேனாதிராசா,
உதவிச் செயலாளர்,
04 - 08 - 1993

(இ-5561)



இரத்ததானம் உயிர் காக்கும்
உயிர் காக்க
சஞ்சீவி
18, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனை

அடைவைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, மூத்திரைச் சந்தையடி, நல்லூர். (26821)

### CLEARANCE SALE

இந்திய சஞ்சிகைகள், மலிவு விலையில் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர். (சி-5528)

### தேவை

½ அங்குலம் இரும்புக்கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளப்படும். துண்டுக் கம்பிகளாயின் 2½ அடிக்கு மேல் இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு: சக்திப் பகுதி, த. பொ. மே. கழகம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி. (சி-5535)

### ஆனந்தம்

சித்த மருத்துவ ஆலோசனைப்படி தயாரிக்கப்பெற்ற ஆனந்தம் சீயாக்காய்ப்பவுடர் பேன், சொடுகு, அழுக்கு அகற்றி, குளிர்ச்சியானது. சுகாதாரத்திற்கு சிறந்தது. ஐந்து நிமிடம் வெந்நீரில் ஊறவிட்டு பாவிக்கவும். இடைக்குமிடம்: ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம் - சாவகச்சேரி, திருவருள் களஞ்சியம்- கொடிகாமம், திரு. மு. சச்சிதானந்தம் வியாபாரிமூலை, பருத்தித்துறை. ஸ்ரீகணேஸ் ஸ்ரோர்ஸ், லீலாவதி ஸ்ரோர்ஸ் கைதடி. (சி-5639)

### புலமைப்பரிசில் பரீட்சை

சிறந்த பெறுபேறுகளைப் புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் வெளியிடப்படும் அடுத்த வினாத்தாள் 8 - 8 - 93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். இவ் வருடம் வெளியிடப்பட்ட வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26810)

### ஆண்டு – 5 பரீட்சை

எம்மால் நடத்தப்படும் புலமைப் பரிசில் முன்னோடிப் பயிற்சிப் பரீட்சையின் இறுதிப் பரீட்சை 7 - 8 – 1993 சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெறவிரும்புவோர் பெற்றுக்கொள்ளலாம். எடிசன் அக்கடமி. யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26817)

### ஆண்டு 4 பரீட்சை

ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெறும் 1994 ஆவணி புலமைப் பரிசில் மாணவருக்கான தொடர் பயிற்சிப் பரீட்சையின் 4 ஆவது பரீட்சை 7 - 8 - 93 சனிக்கிழமை பி ப 3 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெற விரும்புவோர் பெற்றுக்கொள்ளலாம். எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26818)

## கச்சாய்க் கடலில் 3 மீனவர் படையினரிடம் சிக்கினர்

செவ்வாய் அதிகாலை கச்சாய்க் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மூன்று மீனவர்கள் விசைப் படகில் வந்த படையினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

அந்நேரம் அப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்கள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகவும் மீனவர்கள் கடலில் பாய்ந்து நீந்தி வந்த போது படையினர் அவர்களில் மூவரைப் பிடித்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-117)


PERSONAL NEW SCIENCE CENTRE
JAFFNA.

PURE - APP.
Mr. குணசிங்கம்
B Sc. (Hons.)

94 A/L
புதிய பிரிவு
ஆரம்பம்
07-08-93
சனி 2 p. m.

(சி-5556)



SCIENCE COLLEGE
பெருமாள் கோவில் லேன், யாழ்ப்பாணம்.

Pure-App
Mr. குணசிங்கம்
B. Sc (Hons)

95 A/L
ஆரம்பம்:- 05–08–93
வியாழன் 4.15 p.m.

94 A/L
புதிய பகுதி
ஆரம்பம்:- 07–08–93

நேர அட்டவணை:
Sat/Sun - 10 a.m.

(சி/5557)



CHEMISTRY

திரு. செல்வா
B. Sc. (Hons.)

புதிய பிரிவு ஆரம்பம்:
7 - 8 - 1993

7 a. m. – 95 A/L
8 a. m. – 94 A/L
9 a.m. – Revision

PHYSICS

திரு ரவீந்திரநாதன்
B. Sc. (Cey.), Dip-in-Ed.


புதிய பிரிவு ஆரம்பம்:
7 - 8 - 1993

7a.m. – 94 A/L
8a.m. – Revision
9a.m. – 94 A/L
10a.m. – 95 A/L

Personal New Science Centre
Jaffna.

(சி-5559)


## நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 19 | 30 |
| — | — |
| 06 | 06 |
| — | — |
| 1931 | 1993 |

### சீனி குருசாமி


(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

அன்பின் திருவுருவாய் எல்லோர்க்கும் இனியவராய், பண்பாளராய் வாழ்ந்து எமக்கு நல்வழி காட்டிய உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.

126/7, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (26823)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பூமியாகமம்: | ஸ்வர்க்க சங்கமம்: |
|---|---|
| 20 | 17 |
| — | — |
| 06 | 07 |
| — | — |
| 1919 | 1992 |

### ஸ்ரீமதி அமிர்தவல்லி நாகராஜா

(துரை)

திதி: 5 – 8 – 1993


''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே''

எம் இனிய அம்மாவே! ஆண்டு ஒன்றென்ன ஆயிரம் தான் ஆயிடினும் உங்கள் அன்புக்காய் ஏங்குகின்றோம். ஆத்ம சாந்தி பெற்று ஆசி வழங்கிடுங்கள்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கல்வளை,
சண்டிலிப்பாய். (26822)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 14 | 06 |
| 09 | 07 |
| 1920 | 1993 |

### திருமதி பரமேஸ்வரி மாணிக்கம் (பராசக்தி)

புங்குடுதீவு-9

ஆறாத்துயரில் எம்மை மூழ்க வைத்து, மீளாத் துயில் கொண்ட தெய்வமே! பாசம்தனைப் பொழிந்து, நேசம்தனை வளர்த்துக் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எங்கள் அன்புத்தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பலவழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''துளசி''
விநோத் வீதி.
(முள்ளி ஒழுங்கை),
ஆனைக்கோட்டை. (26807)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கண்ணுக்கு தெரியாத காரணம்

வடக்கு-கிழக்கு யுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரும் சாத்தியம் கண்ணுக்குத் தெரியவில்லை. அதனால், அரசாங்கம் விருப்பமின்றியே அடுத்த வருடத்திய வரவு - செலவுத் திட்டத்திற்கும் பாதுகாப்புச் செலவுக்கென 2,500 கோடி ரூபாவை ஒதுக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை, கண்டியில் கல்லூரி ஒன்றின் பரிசளிப்பு விழாவில் பேசும்போது ஜனாதிபதி டி பி. விஜேதுங்கா தெரிவித்திருக்கிறார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்தக் கூடிய முழு அதிகாரமும் உள்ள ஜனாதிபதி இவ்வாறு கூறுவது சிரிப்புக்கு இடமானது. முப்படைகளின் பிரதம தளபதி ஜனாதிபதியே. நாட்டின் பாதுகாப்பு அமைச்சரும் அவரே. அவருக்கு மனமிருந்தால், திறமையிருந்தால், துணிவிருந்தால், தேசப்பற்று இருந்தால் யுத்தத்தை ஒரு நாளிலேயே நிறுத்தும் சர்வ அதிகாரமும் அவரிடம் உண்டு!

வடக்கு-கிழக்கில் யுத்தத்தை அரசே பிரகடனம் செய்தது அவர் நினைத்தால், அந்தப் பிரகடனத்தை நீக்கி, யுத்தத்தை உடனடியாக, ஒரு சில மணித்தியாலங்களிலேயே நிறுத்திவிட முடியும்.

நிபந்தனைகள் நீங்கலான யுத்த நிறுத்தத்துக்குத் தாம் தயார் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்து மாதங்கள் பலப்பல ஆகிவிட்டன. விஜேதுங்கா பதவிக்கு வந்து மூன்று மாதங்கள் முடிந்துவிட்டன. யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்று அவர் நினைத்திருந்தால், மூன்று வாரங்களில் செயலாக்கியிருக்கலாம். செய்யவில்லை; செய்யமுடியவில்லை ஏன்?

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களை இந்த நாட்டின் பிரசைகளாக அவர் இன்னும் கருதவில்லை. அவர்களின் நலன்கருதி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று நினைக்கவில்லை.

அரசாங்கத்தின் நிலைப்பாட்டை — சிங்களவர்களுக்குச் சாதகமான தீர்வு என்ற நிலைப்பாட்டை — விடுதலைப் புலிகளும், தமிழர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அரச தலைவர்களும், சிங்களத் தலைவர்களும் எதிர்பார்க்கிறார்கள். தமிழர்களின் நலன் கருதி, அவர்களின் நியாயமான உரிமைகளை வழங்க வேண்டும் என்ற சிறிதளவான விட்டுக் கொடுக்கும் மனவிருப்பம் இருக்குமானால், இனப் பிரச்சினைக்குத் தீர்வும், யுத்தத்தை நிறுத்துவதற்கான சாத்தியமும் தெளிவாகத் தென்படும்!

அந்த மனவிருப்பம் இல்லாதிருப்பதாலேயே அவருக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் சாத்தியம் கண்ணுக்குத் தெரியவில்லை.

தமக்கும், தமது சகாக்களுக்கும் அடுத்த வருடத்திலும் தமிழர் நலன் கருதிப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற மனமாற்றம் ஏற்படாது என்பதை அவர் இப்போதே முன் உணர்கிறார். அதனாலேயே அடுத்த வரவு செலவுத் திட்டத்திலும் பாதுகாப்புக்கு 2,500 கோடி ரூபா ஒதுக்கப் போகிறார்!

# போராளிகளின் மனஉறுதியே எம் வெற்றிகளுக்கு காரணம்

### சர்வதேச கூட்டுறவு தின விழாவில் சூசை உரை

தாளையடி, ஆக. 5

'போராளிகளின் மன உறுதியினால் தான், எதிரியின் முகாம்கள் அழிக்கப்பட்டு, பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு வருகின்றன. அண்மையில் மண்கிண்டி மலை சிறிலங்கா இராணுவ முகாம் எமது போராளிகளால் தாக்கி அழிக்கப்பட்டு பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன'

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் செம்பியன்பற்றில் நடத்தப்பட்ட சர்வதேச கூட்டுறவு தின விழாவில் உரையாற்றுகையில் கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை மேற்கண்டவாறு கூறினார்.

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சி பொன்னம்பலம் தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்பொறுப்பாளர் திரு. கார்த்திகன் தமிழீழ தேசியக் கொடியையும், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. லிங்கநாதன் கூட்டுறவுக் கொடியையும் ஏற்றி வைத்து விழாவை ஆரம்பித்து வைத்தார்கள்.

கடற்புலிகளின் விசேட தளபதி திரு சூசை தொடர்ந்து உரையாற்றும்போது மூன்று வருடங்களுக்குமுன்பு ஆரம்பிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய வளர்ச்சி அடைந்த சங்கங்களைப் போல் வளர்ந்து வருகின்றது.

இக் கூட்டுறவுச் சங்கம் உணவு விநியோகத்தோடு, வடமராட்சி கிழக்கின் போக்குவரத்து, கல்வி ஆகியவற்றில் காணப்படும் பிரச்சினைகளை சீரமைப்பதிலும் அதிக அக்கறைகாட்டி வந்துள்ளது.

இச் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் நாக கோவிலில் வடமராட்சி கிழக்கின் கல்விப் பிரச்சினை சம்பந்தமான ஒரு கருத்தரங்கினை ஒழுங்கு செய்து நடத்தியது. அதில் கலந்துகொண்ட திணைக்கள அதிகாரிகளுக்கு, வடமராட்சி கிழக்கில் கல்வியில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் அப்போதுதான் தெரியவந்தது என்றார்.

விழாவில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ லிங்கநாதன் வடமராட்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் திரு. கிருஸ்ணபிள்ளை ஆகியோரும் உரையாற்றினார்கள்.

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சர்வதேச கூட்டுறவு தின விழாவையொட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியமாணவர்களுக்கு கடற்புலிகளின் விசேட தளபதி திரு சூசை பரிசில்களை வழங்கினார்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(இ-144)

மணலாறு

## இராணுவ தலைமையகத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள்

கொழும்பு, ஆக. 5

மணலாறில் உள்ள இராணுவ இணைப்புத் தலைமையகத்தின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தலைமையகத்தின் தலைவராக பணிபுரியும் பிரிகேடியர் பாறிவியனகே மண்கிண்டி மலைத் தாக்குதலின் போது குருணாகலையில் இருந்தார். தகவல் கிடைத்து அவர் மணலாறு விரைந்து சென்றார். பின்னர் தமது தலைமையகத்தில் அப்பகுதியில் உள்ள இராணுவ முகாம்களின் கட்டளைத் தளபதிகளுடன் மாநாடுஒன்றை நடத்தினார்.

அப்பகுதி முகாம்களை எந்த நேரமும் பலப்படுத்திய நிலையில் வைக்குமாறு உத்தரவிட்ட அவர், தமது தலைமையகத்தையும் பலப்படுத்தும்படி உத்தரவிட்டார்.

தலைமையகத்தைச் சுற்றி மேலும் முட்கம்பித் தடைகள் போடப்பட்டுள்ளன.

(இ-எ)

## மாணவர் உணவு முத்திரை விநியோகிக்க கால நீடிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 5

மாணவர் மதிய உணவு முத்திரைகளுக்கான ஜனவரி பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய பொருள்களை அடுத்த மாதம் 5ஆம்திகதிக்கு முன்னர் ப. நோ. கூ. சங்கங்கள் விநியோகித்து முடிக்க வேண்டும்.

இப்படியான பணிப்புரையை யாழ். சமூக சேவைகள் பணிப்பாளர் திருமதி கே. சிவசிதம்பரம் விடுத்துள்ளார்.

சில ப. நோ. கூ. சங்கங்கள் இந்த விநியோகத்தை செய்து முடிக்கவில்லை என்றும்— மாணவர் முத்திரைக்கான உணவுப் பொருள்களை கொள்வனவு செய்வதில் ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடியும், பொருள்கள் தட்டுப்பாடுமே இதற்குக் காரணம் என்பதால் இந்த காலக்கெடு நீடிக்கப் பட்டுள்ளதாகவும்—

எக்காரணம் கொண்டும் மீண்டும் இக்காலக்கெடு நீடிக்கப்படமாட்டாது என்றும்— அவர் தமது பணிப்புரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

(த-3)

### சுவாமி சின்மயானந்தா காலமானார்

கலிபோர்ணியா ஆக. 5

சுவாமி சின்மயானந்தா செவ்வாய்க்கிழமை இரவு கலிபோர்ணியா மருத்துவமனை ஒன்றில் காலமானார். 79 வயதான அவருக்குக் கடந்தவாரம் இதய நோய்க்காக அறுவைச் சிகிச்சை நடைபெற்றது.

கேரளாவில் பிறந்த சுவாமி சின்மயானந்தாவின் பெயரால் இந்தியாவின் பல பாகங்களிலும் இன்மியர் மிஷன் பாடசாலைகள் இயங்குகின்றன.

ஆன்மீக எழுச்சிக்காக சுவாமி சின்மயானந்தா குழந்தைகளுக்குப் 'பாலவிகார்' அமைத்தும் இளைஞர்களுக்கு 'யுவகேந்திரங்'களை நியமித்தும் பெண்களுக்கு 'தேவி குழுக்'களை ஏற்படுத்தியும் பெரியோர்களுக்கு வேதாந்த வகுப்புகளை ஒழுங்கு செய்தும் ஆன்மீகச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

### பதவியாவில் தாக்குதல்

கொழும்பு, ஆக. 5

கடந்த புதனன்று பதவியாவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 3 படையினர் காயமடைந்தனர் என்றும்—

அவர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

(உ-எ)

## இலக்கிய சந்திப்பு

யாழ்ப்பாணம், ஆக. 5

நூல் விமர்சன அரங்கும், தகவம் பரிசளிப்பு விழாவுக்குமான யாழ். இலக்கிய வட்டத்தின் ஒன்றிணைதல் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் யாழ். இலக்கிய வட்டத் தலைவரும், யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளருமான திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும். சந்திப்பில் 1990ஆம் ஆண்டுக்கான நாவல் மதிப்பீட்டில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

அரியாலையூர் கவிஞர் வே. ஐயாத்துரையின் 'வளர் தெங்கு' சிறுவர் கவிதைநூல் (கையெழுத்துப் பிரதி) பற்றிய விமர்சன உரையை கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை நிகழ்த்துவார். மதிப்பீட்டில் பரிசுபெற்ற நூல்களுக்கான பரிசில்களை தகவம் செயலர் திரு. பொ. இராசதுரையிடம் இருந்து திரு. து. வைத்திலிங்கம், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் பெற்றுக்கொள்வார்கள்.

(க-111)

### மஹா சங்கட சதுர்த்தி விரதம்

சங்கடங்கள் தீர நாளை வெள்ளிக்கிழமை மஹா சங்கட சதுர்த்தி விரதத்தை அனுஷ்டிக்குமாறு சைவ மக்களைக் கேட்டுக்கொள்ளும் துண்டுப் பிரசுரம் ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

(க)

### ஆலயங்களில்

கரவெட்டி பரலோக மாதா ஆலய நவநாள் நாளை 6ஆம் திகதி மாலை 5மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 15ஆம் திகதியான ஆரோகணத் திருநாளன்று காலை திருநாள் திருப்பலியும் மாலை 4மணிக்கு திருச்சொரூபப் பவனியும் அதைத் தொடர்ந்து நன்றி ஆராதனையும் இடம்பெறும்.

(க)

உ

### நல்லூர் உற்சவகால அருட்பிரசாதம்

## முருகனைத் தொழு மனமே

இராகம்: பெகாக் தாளம்: ஆதி

பல்லவி

முருகனைத் தொழு மனமே - நல்லை
முருகனைத் தொழு மனமே
(முரு)

அநுபல்லவி

கருணைசெய் முகமாறும் கண்மலர் ஈராறும்
கரமொரு வடிவேலும் களிகொள அமர் நல்லை
(முரு)

சரணம்

சரவணத் தடமதிலே தாமரை மலர்களிலே
தவளின வெயில்எனவே தனியறு மதலைகளாய்
அழிபசி மிகஎழவே அறுவரின் முலையமுதை
அவர்தர அகமகிழும் அறுமுக வடிவோனாம்
(முரு)

— சேந்தன்.

## பரந்த நிலமிருக்க பறந்து திரிவானேன்
## சிறந்த வளமிருக்க சிதைந்து திரிவானேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அருளானந்தம் ரஞ்சிதம்

யாழ்ப்பாணம், ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாக கொண்ட திருமதி அ. ரஞ்சிதம் கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கனகசபாபதி-செல்லாச்சியின் ஏக புத்திரியும். உயரப்புலம் ஆனைக்கோட்டையை சேர்ந்த காலஞ்சென்ற ஐயாத்துரை அருளானந்தத்தின் [விவசாயத் திணைக்களம்] அன்பு மனைவியும், திருமதிகள் சுசீலா, கமலா, விஜயா (நோர்வே), ஜெயா (கொழும்பு), சித்திரகலா (ஜேர்மனி), சூரியகலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ந. சற்குணநாதன் (பொலீஸ் உத்தியோகத்தர் வவுனியா), ஞா. பாலகிருஷ்ணன் (சவுதிஅரேபியா), சி. சந்திரசேகரம் (நோர்வே), சி. கணபதிப்பிள்ளை (சுவிஸ்), ச. ஸ்ரீகுமாரன் (ஜேர்மனி), ச. சண்முகராஜன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகன்யா, சுமித்திரா, ராஜீவ், நிரோஷன், கார்த்திகா, கார்த்திபன், பிரதீபன், சண்முகப்பிரியா, சண்முகவதனா, சிந்துஷா, சஞ்சீவ், ரஜீவ், பிரியங்கா, தனுஜா, கம்சவதனி, கம்சரேகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 03-08 1993 அன்று கொழும்பில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
திருமதி ச. சுசிலா
திருமதி பா. கமலா
(மகள்மார்)

இல. 9, ஐயனார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (26826)

## சிவஸ்ரீ சி. வரதராஜக்குருக்கள்

(பிரதமகுரு, விசவத்தனை முருகன் கோவில், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்)

சிவஸ்ரீ சி. வரதராஜக்குருக்கள் இறைபதம் சேர்ந்து விட்டார். இவர் காலஞ்சென்ற திருமதி ஞானாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவஸ்ரீ இராதாக்கிருஷ்ணக்குருக்கள் மற்றும், ஸ்ரீகாந்தன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), விஜயரங்கன் (டென்மார்க்), சிவகுமாரன் (நிதிக்கிளை, யாழ். பல்கலைக்கழகம்), ஞானேஸ்வரன் (யாழ். போதனா வைத்தியசாலை), ஞானசேகரன், ஜெகதானந்தன் (கமத்தொழில் காப்புறுதிச்சபை வவுனியா), இராஜேஸ்வரக்குருக்கள், பிருந்தா, சாருமதி ஆகியோரின் அன்பான தந்தையும் சிவஸ்ரீ ச. சோமஸ்கந்தக்குருக்கள் (வேரற்கேணி கந்தசாமி கோவில், மட்டுவில்) அவர்களின் அன்பு மாமனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் பண்ணாகம், விசவத்தனையில் நடைபெறும்.

தகவல்;
பிள்ளைகள்

பண்ணாகம், சுழிபுரம். [26828]

## அப்புக்குட்டி நல்லையா

(இளைப்பாறிய துறைமுக கட்டுத்தாபன உத்தியோகத்தர்)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி நல்லையா 4-8-93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - பத்மினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீபாலன், ஸ்ரீரஞ்சினிதேவி, நவரஞ்சினிதேவி, காலஞ்சென்ற கலாரஞ்சினி, ஸ்ரீகாந்தன், ஸ்ரீதரன், ஸ்ரீரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வை. நடேசு, ந. அரசரத்தினம் (நாகம்ஸ் சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்லையா, கந்தையா, செல்லம்மா மற்றும் கதிராசிப்பிள்ளை, நல்லம்மா ஆகியோரின் சகோதரரும், தபேசன், சிவரஜனி, சிவராஜினி, ரேணுகா, முகுந்தன், ரேகலா, ரேகா, மயூரன ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இவரது இல்லத்தில் இன்று நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக 2.00 மணியளவில் கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனகம்மா
(மனைவி)

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம். (6615)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 5-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## இலங்கை 4 விக்கெட்டுக்கு 226 ஓட்டங்கள்

கொழும்பு, ஆக 5

இலங்கை-இந்திய அணிகளுக்கிடையில் கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் ஆரம்பமான மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது நாளான நேற்று ஆட்ட நேர இறுதியின் போது இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இலங்கைத் தரப்பில் அஸங்க குருசிங்க 56, அரவிந்த டி சில்வா ஆட்டமிழக்காமல் 118, ஹஸான் திலகரத்ன ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

(உ)

## இசை ஆசிரியர் கருத்தரங்கு

மருதனார்மட கோட்ட இசை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை மறுதினம் சனிக்கிழமை சங்கீத பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு சு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

(க-152)

## யுத்தக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

அத்துக்கோறளை [வயது 24], டி சுனில் [வயது 25], ஈ. எம். திஸநாயக்க [வயது 29], ராஜரட்ன, சமத்திலக, விஜயபண்டார [வயது 24], பீ. என். குமார [வயது 24], எஸ். எம். பியரட்ண [வயது 25]. என். எம். கருணநாயக்க [வயது 32] விஜந்த, சமன்சிறி [வயது 24], ஜெயவர்த்தன [வயது 27] ஆகியோரே நேற்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இவர்களுள் ஒருவர் மயக்க முற்ற நிலையிலும்—

மற்றொருவர் வாயால் நுரை கக்கி, வாந்தி எடுத்த நிலையிலும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

(உ-5-9-15)

## யாழ். இளைஞரின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மினியத் தகட்டை அவருடைய இருதயத்தில் கவனக் குறைவாக வைத்து டாக்டர்கள் தைத்து விட்டனர் என்றும் சொல்லப்படுகிறது.

அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் 15 ஆம் இலக்க அலுமினியத் தகட்டைக் காணவில்லை என்று தெரிந்து கொண்டடாக்டர்கள் இரண்டு நாள் கழித்து—கடந்த ஞாயிற்றுக்கிழமை—செல்வநாதனை மீண்டும் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தினர் என்றும்—

அப்போது செல்வநாதன் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மரணம் குறித்து ஆஸ்பத்திரி பணிப்பாளர் டி. எச். ஓ. பெர்னாண்டோ கருத்து வெளியிட மறுத்து விட்டார் என்று "வெரித்தாஸ்" வானொலி அறிவித்தது.

ஊர்காவற்றுறை, நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வநாதன், முன்னர் ஆனைக்கோட்டையில் வசித்து வந்தார். இவரது இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றன.

(உ-எ)

## மன்னார் அலுவலகத்தை மூட செஞ்சிலுவைக் குழு முடிவு?

மன்னாரில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்தை மூடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இனிமேல் அநுராதபுரத்தில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக குழு அலுவலகமே மன்னார் மாவட்டத்துக்கான விடையங்களைக் கையாளும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் வழமை நிலைக்கு இன்னும் திரும்பவில்லை என்றும் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தொடர்ந்து அங்கு செயற்பட வேண்டும் என்றும் —

இலங்கை செஞ்சிலுவைச் சங்க மன்னார் கிளை உட்பட பல சமூக அமைப்புக்கள் கோரியுள்ளன.

வட மாகாணத்தில் வவுனியாவுக்கு இப்பால் மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இரு இடங்களில் மட்டுமே செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் நிரந்தர அலுவலகங்கள் இயங்கி வந்தனும் —

ஏனைய இடங்களுக்கான வேலைகள் அநுராதபுரம் அலுவலகம் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## நாகர்கோவில் கடலில் மீனவர் மீது தாக்குதல்

கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளிலும் நாகர் கோயில் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தினர்.

திங்கள் இரவு இரு மீனவர்கள் கட்டுமரத்தில் சென்று கொண்டிருந்த போது. அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் தமது படகினால் கட்டுமரத்தை மோதினர்.

மீனவர்கள் இருவரும் கடலில் பாய்ந்து தப்பிக் கொண்டனர். அடுத்த நாள் கட்டுமரம் சேதமுற்ற நிலையில் கடலில் இருந்து மீட்கப்பட்டது.

இதேபோன்று —

நேற்று முன்தினம் இரவும் தொழில் செய்து கொண்டிருந்த மீனவரை நோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

எனினும் மீனவர்கள் சாதுரியமாகத் தப்பி கரைவந்து சேர்ந்தனர்.

(உ-173-144)

### தட்டெழுத்தாளர் பதவி:

## நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில்?

யாழ்ப்பாணம், ஆக. 5

கடந்த வருடம் நடந்த தட்டெழுத்தாளர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடாத்தக் கூடிய சாத்தியமான நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இப்போட்டிப் பரீட்சையில் கூடுதல் புள்ளி பெற்ற 76 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியலை வடக்கு — கிழக்கு மாகாணசபை யாழ். அரச அதிபருக்கு அண்மையில் அனுப்பியிருந்தது.

இப்பட்டியலில் உள்ளவர்களை நேர்முகப் பரீட்சைக்காக எதிர் வரும் 18 ஆம் திகதி திருகோணமலைக்கு வருமாறும் மாகாண சபை கோரியிருந்தது.

தற்போதைய சூழ்நிலையில் இவர்கள் திருகோணமலைக்கு நேர்முகப் பரீட்சைக்கு வர முடியாதுள்ளதால், நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என்று யாழ். அரச அதிபர் மாகாணசபை அதிகாரிகளை கேட்டிருந்தார்.

யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகத்துக்கு நேற்று அனுப்பிய செய்தியில் —

நேர்முகப் பரீட்சைக்கு திருகோணமலைக்கு செல்ல வேண்டாம் என பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தல் வழங்குமாறு கேட்டுள்ளார்.

(உ-3)

## சடலங்களுடன் போகும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரின் தாயார் "புலிகளின் குரல்" வானொலிக்கு அளித்த பேட்டியில் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

"எங்கள் பிள்ளைகள் 33 பேரினதும் துக்கத்தை கருத்தில் கொண்டு, வடக்கில் இருப்பவர்களுக்கு அவர்கள் கேட்பதை வழங்கி, எமது பிள்ளைகளை விடுவிக்க உதவுங்கள். பாதுகாப்பு அமைச்சரிடமும், இராணுவத் தளபதியிடமும், ஜனாதிபதியிடமும், எதிர்க்கட்சித் தலைவியிடமும் நாம் இந்த உதவியைக் கோருகின்றோம்."—இவ்வாறு அந்தத் தாயார் மேலும் தெரிவித்தார்.

## கைதிகளை விடுவிக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன நிறுவனங்களின் ஆதரவைக் கோரியுள்ளதாகவும் அவர் சொன்னார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகளுக்கு செய்தி ஒன்றை அனுப்ப தாங்கள் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும்

தமது முயற்சி வெற்றியளிக்க யாழ் ஆயர் வண. ஜோமதஸ் சௌந்தர நாயகத்தின் ஆதரவைப் பெறுவதற்கு எண்ணியிருப்பதாகவும் - அவர் மேலும் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org